உ
சிவமயம்



அமரர்

# திருமதி தவமணி நற்குணசிங்கம்

அவர்களின்

# நினைவுமலர்

In Memory of

# Late Mrs. Thavamany Natkunasingam

19-08-2026

உ
சிவமயம்

தோற்றம்
04
03
1938



மறைவு
20
07
2026

அமரர்

# திருமதி தவமணி நற்குணசிங்கம்

திதி: ஆடி மாத வளர்பிறை ஷஷ்டி

## திதி நிர்ணய வெண்பா

நல்ல பராபவ வருடமா டிசேர்ந்த
வல்ல திங்கள் வளர்நல் ஷஷ்டியிலே
தவமணி யம்மை தன்வாழ் வகன்று
சிவனடி சென்றார் காண்!

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பலர் நீக்கி
நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே

# திருவாசகம்

*அம்மையே அப்பா ஒப்பிலா மணியே*
*அன்பினில் விளைந்த ஆரமுதே*
*பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்*
*புழுத்தலைப் புலையனேன் றனக்குச்*
*செம்மையே ஆய சிவபதம் அளித்த*
*செல்வமே சிவபெருமானே*
*இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந்தருளுவதினியே*

# திருவிசைப்பா

*ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே*
*உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே*
*தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே*
*சித்தத்துள் தித்திக்கும் தேனே*
*அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே*
*அம்பலம் ஆடரங் காக*
*வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை*
*தொண்டனேன் விளம்புமா விளம்பே*

# திருப்பல்லாண்டு

*பாலுக்கு பாலகன் வேண்டியழுதிடப்*
*பாற்கடல் ஈந்த பிரான்*
*மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்*
*மன்னிய தில்லை தன்னுள்*
*ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்*
*பலமே இடமாக*
*பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே*
*பல்லாண்டு கூறுதுமே*

## திருப்புராணம்

*ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள*
*அளப்பரும் கரணங்கள் நான்கும்*
*சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்*
*திருந்து சாத்து விகமே ஆக*
*இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த*
*எல்லையில் தனிப் பெருங் கூத்தின்*
*வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து*
*மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்*

## திருப்புகழ்

*இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி*
*பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா*
*கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே*

## வாழ்த்து

*வான்முகில் வழாது பெய்க*
*மலிவளம் சுரக்க மன்னன்*
*கோன்முறை அரசு செய்க*
*குறைவிலாது உயிர்கள் வாழ்க*
*நான்மறை அறங்கள் ஓங்க*
*நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்*

**திருச்சிற்றம்பலம்**

# அமரர் திருமதி தவமணி நற்குணசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

*ஈழத்தாயின் எழில்தலையான வடபால் யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் 16 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மாதகல் என்னும் கிராமம், சைவ தமிழ் மரபு தழைத்து வளரும் புகழ்பெற்ற ஊராகும். பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் கோவில், நுணசை முருகன் கோவில், நுணசை கூடல்விளாத்தி ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் கோவில், அரசடி பிள்ளையார் கோவில் போன்ற அருள்மிகு கோவில்கள் நிறைந்த புண்ணிய பூமியான இக்கிராமத்திலேயே, 1938 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி (04.03.1938), ரேவதி நட்சத்திரத்தில், கந்தையா – மனோன்மணி தம்பதியினருக்கு அருமைப் புதல்வியாக தவமணி அவர்கள் பிறந்தார்.*

*இவரது உடன்பிறப்புகளாக காலஞ்சென்ற அண்ணன்மார்களான புண்ணியமூர்த்தி, ராமசாமி, காலஞ்சென்ற அக்கா சிவபாக்கியம், கனடாவில் வசிக்கும் தம்பி துரைசிங்கம், மற்றும் காலஞ்சென்ற தங்கை புவனேஸ்வரி ஆகியோர் இருந்தார்கள்.*

*தனது ஆரம்பக்கல்வியை யாழ்/மாதகல் சென். தோமஸ் பாடசாலையில் கற்ற இவர், பின்னர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். தனது 25 வயதில் 1963 ஆம் ஆண்டு, அம்பலவாணர் – செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனான திரு நற்குணசிங்கம் அவர்களை திருமணம் செய்து இனிய இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.*

*இருவரின் திருமண வாழ்க்கை 63 ஆண்டுகள் இனிதே நிறைவுற்றது. கணவனின் மின்பொறியாளர் பணியின் காரணமாக, மாதகல், இந்தியா, கொழும்பு எனப் பல இடங்களில் காலத்திற்கேற்ப இடம் மாறி வாழ்ந்தபோதிலும், அவர்களின் அன்பும் இணைப்பும் என்றும் மாறவில்லை. வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகள் அனைத்தையும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கடந்து, நீண்ட நெடிய 63 ஆண்டுகளை அன்புடனும் அர்ப்பணிப்புடனும் இணைந்து வாழ்ந்தனர்.*

*இத்தம்பதியினருக்கு முதற்பேறாக மகள் சறோஜினி பிறந்தார். பின்னர் சிவகுமார், ஜெயக்குமார், ராஜ்குமார் மற்றும் செல்வகுமார் ஆகிய நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.*

*திருமணத்திற்குப் பின்னர் முதலில் மாதகலிலும், பின்னர் கொழும்பிலும் வாழ்ந்தார். 1983 ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து மீண்டும் மாதகலுக்குத் திரும்பி சென்று வாழ்ந்தார். அதன் பின்னர் கணவரின் பணியிட மாற்றமும், நாட்டின் உள்நாட்டு யுத்த சூழலும் காரணமாக, 1992 ஆம் ஆண்டு முதல் கொழும்பில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்து வந்தார்.*

*1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி, தனது இரண்டாவது பிள்ளையான சிவகுமார் 29 வயதில் காலமானார், அவரது வாழ்க்கையில் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்திய மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.*

*மூத்த மகளான சறோஜினி அவர்கள், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டும், கனடாவில் வசிக்கும் சகாதேவா அவர்களைத் திருமணம் செய்து, மதுஷாஜினி மற்றும் தேவஷாஜினன் ஆகிய இரு பிள்ளைகளின் பெற்றோராக உள்ளனர். அவர்கள் தற்போது கனடாவில் வசித்து வருகின்றனர்.*

*மூன்றாவது மகனான ஜெயக்குமார் அவர்கள், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஷகிலா அவர்களைத் திருமணம் செய்து, பிரகாஷ் மற்றும் நிருஷா ஆகிய இரு பிள்ளைகளின் பெற்றோராக உள்ளனர்.*

*நான்காவது மகனான ராஜ்குமார் அவர்கள், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட விஜிதா அவர்களைத் திருமணம் செய்து, ஹரேஷ் மற்றும் விஷானா ஆகிய இரு பிள்ளைகளின் பெற்றோராக உள்ளனர். அவர்கள் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றனர்.*

*இளைய மகனான செல்வகுமார் அவர்கள், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுபோதினி*

*அவர்களைத் திருமணம் செய்து ஹரிணியா, வேணியா மற்றும் கவிநயா ஆகிய மூன்று பிள்ளைகளின் பெற்றோராக உள்ளனர்.*

*கொழும்பில் வாழ்ந்த காலத்தில் முதலில் கொள்ளுப்பிட்டியிலும் பின்னர் வெள்ளவத்தையிலும் வசித்தார். கொள்ளுப்பிட்டியில் வசித்த காலங்களில், கொள்ளுப்பிட்டி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் – ஸ்ரீ ஐயப்ப சுவாமி கோவிலுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும், மேலும் விஷேட விரத நாட்களிலும் தவறாமல் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். ஆழ்ந்த இறைபக்தி, எளிமை, அன்பு, பொறுமை மற்றும் குடும்பப் பாசம் ஆகிய உயரிய பண்புகளால் அனைவரின் மதிப்பையும் அன்பையும் பெற்றவர்.*

*இவரது விருப்பப்படி தனது முதுமைக்காலத்தில் இளைய மகன் செல்வகுமார் குடும்பத்துடன் கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்தார்.*

*2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி, திங்கட்கிழமை காலை 8.10 மணியளவில், வீட்டில் உணவை முடித்து ஆடி மாத வளர் ஷஷ்டி திதியில் அமைதியாக இறைவனடி சேர்ந்தார்.*

*அவரது மறைவு குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பேரிழப்பாகும். அவர் வாழ்ந்த வாழ்க்கை அன்பு, அர்ப்பணிப்பு, இறைநம்பிக்கை மற்றும் குடும்பப் பொறுப்புணர்வின் சிறந்த எடுத்துக்காட்டாக என்றும் நினைவுகூறப்படும்.*

***அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை மனதாரப் பிரார்த்திப்போம்.***

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*** 🙏

## *Biography of the Late Mrs. Thavamany Natkunasingam*

*The village of Mathagal, situated approximately 16 kilometres from the city of Jaffna in the northern region of the beautiful land of Sri Lanka, is a renowned village where Saiva Tamil traditions have flourished and continue to thrive. This sacred village is home to several revered temples, including Panaavetti Bhuvaneswari Amman Temple, Nunasai Murugan Temple, Nunasai Koodalvilathi Sri Santhanayagi Sametha Chandramouleeswarar Temple, and Arasadi Pillaiyar Temple. It was in this blessed village that Thavamany was born on 4 March 1938 (04.03.1938), under the Revathi star, as the beloved daughter of Kanthiah and Manonmany.*

*Her siblings were her late elder brothers Puniyamoorthy and Ramasamy, her late elder sister Sivapakkiyam, her younger brother Thuraisingam, who resides in Canada, and her late younger sister Bhuvaneswari. She received her primary education at J/Mathagal St. Thomas' School and subsequently continued her education at Pandatharippu Girls' College.*

*At the age of 25, in 1963, she married Mr. Natkunasingam, the eldest son of Mr. Ambalavanar and Mrs. Chellamma, and embarked upon a happy married life. Their marriage was blessed with 63 years of love and companionship. Although they lived in different places over the years including Mathagal, India and Colombo due to her husband's work as an Electrical Engineer, their love and bond remained unwavering. Through all the joys and challenges of life, they stood by each other, supporting one another and sharing 63 long and fulfilling years together with love and devotion.*

*Their first child was a daughter, Sarojini, followed by four sons: Sivakumar, Jeyakumar, Rajkumar and Selvakumar.*

*After her marriage, she initially lived in Mathagal and later in Colombo. Following the ethnic riots of July 1983, she returned to Mathagal, where she lived for a period. Subsequently, due to her husband's transfers and the prevailing civil war situation in the country, she settled permanently in Colombo from 1992 onwards.*

*On 16 June 1996, her second child Sivakumar passed away at the young age of 29. This was an unforgettable and deeply painful loss that brought profound sorrow to her life.*

*Her eldest daughter, Sarojini, married Sahadeva, who is originally from Chunnakam and resides in Canada. They have two children, Mathushajini and Thevashajinan, and currently live in Canada.*

*Her third son, Jeyakumar, married Shakeila, who is originally from Chunnakam and resides in Colombo. They have two children, Prakash and Niroosha.*

*Her fourth son, Rajkumar, married Vijitha, who is originally from Karaveddy and resides in Colombo. They have two children, Haresh and Vishana, and currently live in Australia.*

*Her youngest son, Selvakumar, married Subothiny, who is originally from Udupiddy and resides in Colombo. They have three children Hariniya, Veniya and Kavinaya.*

*During the years she lived in Colombo, she first resided in Kollupitiya and later in Wellawatte. While living in Kollupitiya, she faithfully visited the Kollupitiya Sri Devi Karumari Amman – Sri Ayyappa Swamy Temple every Tuesday and Friday, as well as on special fasting and religious observance days, to worship the Almighty. With her deep devotion to God, simplicity, kindness, patience and profound love for her family, she earned the respect and affection of everyone who knew her.*

*In accordance with her wishes, during the later years of her life she lived with her youngest son, Selvakumar, and his family in Wellawatte, Colombo.*

*On the morning of 20 July 2026, Monday, at approximately 8:10 a.m., after having her meal at home, she peacefully departed this world and reached the feet of the Almighty, on the Valarpirai Shashti Tithi of the month of Aadi.*

*Her passing is a profound loss to her family, relatives and friends. The life she lived will forever be remembered as a shining example of love, devotion, faith in God and dedication to family responsibilities.*

***Let us pray to the Almighty God with all our hearts that his soul may rest in peace.***

***Om Shanti! Shanti!! Shanti!!!*** 🙏

## "ஒரு நிறைந்த சுமங்கலியின் வாழ்வியல் நிறைவு"

*என்றும் நிறைந்த புன்னகை, அளவளாவி செல்லும் பண்பியல் நிறைந்த பக்தி, இதுதான் தவமணி அம்மையார் குண இயல்பு. 1993 ஆம் ஆண்டிலிருந்து கொள்ளுப்பிட்டி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயத்தின் குருவாக நான் பணியாற்றிய காலம் வெள்ளிக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை, விஷேட விரத நாட்கள் என ஆலயத்திற்கு குடும்பத்தோடு வருகைதந்து வணங்கி செல்கின்றவர். இவரின் கணவர் நற்குணசிங்கம், பெயருக்கு ஏற்ப பண்பின் சிகரம், ஐந்து பிள்ளைகள் கொண்ட இவர்களின் குடும்பம், எல்லோரும் பழகுவதற்கு மிக்க இனிமையானவர்கள்.*

*அம்மையார் தவமணி எப்போதும் கருமாரி அம்மனிடம் நிறைந்த பக்தியோடு வழிபாடு செய்கின்றவர். திருவெம்பாவை பூஜையில் ஒரு உபயமும் தமது குடும்பத்தின் பெயரிலே செய்து வத்தவர். தமது குண இயல்புகளை நன்கு பரிமாற்றம் செய்து பிள்ளைகளையும் உயர்வு அடைய செய்தவர். இவர்களின் மூத்த மகன் சிவகுமார் 1996 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார், சறோஜினி, ஜெயக்குமார், ராஜ்குமார், செல்வகுமார் எல்லோரும் பழகுவதற்கு இனியவர்கள்.*

*தமது பிள்ளைகளை எல்லாம், இல்லற வாழ்வில் இணைத்து, பேரப்பிள்ளைகளையும் கண்டு நிறைவான வாழ்வு வாழ்ந்து நிறைந்த சுமங்கலியாக தனது 88 ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.*

*அம்மையார், ஆத்மா சாந்தியடைய அம்பாளை பிரார்த்தனை செய்து, குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன்.*

**ஓம் சாத்தி!**

***கலாநிதி சிவசக்தி ஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்***

# என் அன்பு மனைவிக்கு...

*என் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் துணையாக இருந்தவளே,*

*நீ என்னை விட்டுப் பிரிந்துவிட்டாய் என்பதை என் மனம் இன்னும் ஏற்க மறுக்கிறது. உன்னுடன் பகிர்ந்த ஒவ்வொரு சிரிப்பும், ஒவ்வொரு உரையாடலும், ஒவ்வொரு நினைவும் இன்று என் கண்களில் கண்ணீராக மாறியுள்ளது.*

*என் வெற்றியின் பின்னாலும், என் தோல்வியின் நேரத்திலும், என்னுடன் உறுதியாக நின்றது நீயே. குடும்பத்திற்காக நீ செய்த தியாகங்களையும், அன்பையும், அர்ப்பணிப்பையும் நான் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது.*

*இன்று நீ என் அருகில் இல்லாவிட்டாலும், உன் அன்பும், உன் நினைவுகளும், நீ கற்றுக் கொடுத்த வாழ்க்கைப் பாடங்களும் என்றென்றும் என்னுடன் இருக்கும். உன் புன்னகை என் மனதில் என்றும் அழியாத ஓவியமாக பதிந்துள்ளது.*

*அன்பின் உருவமாக வாழ்ந்த என் மனைவியின் ஆத்மா இறைவனின் திருவடியில் நித்திய அமைதியையும் பேரின்பத்தையும் அடையட்டும். அவருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை மனதாரப் பிரார்த்திக்கிறேன். என்றும் உன் நினைவுகளுடன் வாழ்கிறேன்.*

***என்றும் உன்னை நேசிக்கும்***
***கணவன் நற்குணசிங்கம்***

# *மகளின் புலம்பல்...*

*அம்மா உலகத்தில் முதல் தெய்வம்...*

*அம்மா இந்த வார்த்தைக்கு ஈடு இணை எதுவும் இல்லை. எங்கள் குடும்பத்தில் நான்கு ஆண் பிள்ளைகளுக்கு மத்தியில் ஒரே பெண் பிள்ளையாக நான் பிறந்தேன்.*

*அம்மா என்னை வளர்த்த விதமே தனித்துவமானது. அன்பு, பாசம், பொறுமை, ஆளுமை, அடக்கம் என்பனவற்றை அழகாக சொல்லித்தந்த தாய். அது மட்டுமின்றி, தெய்வ பக்தி, கலாச்சாரம் என்கிற இரண்டு விடயங்களில் மிக கவனமாக இருந்து வழிநடாத்தியவர்.*

*இன்று எங்கள் குடும்பத்தில் எல்லோரும் குடும்பஸ்தர்களாக வாழுகின்ற சிறப்பை நல்ல முறையில் வழிகாட்டியவர் அம்மா. எது நல்லது, எது தவறானது என்பதை அழகாக தெளிவுபடுத்தி தந்த தாய். நாங்கள் எல்லோரும் சந்தோஷமாக சிறப்பாக வாழ்வதற்கு அம்மாவின் இல்லற தர்மம் அது சார்ந்த வாழ்வியல் பெரிய முன்னுதாரணமாகவும், வழிகாட்டலாகவும் அமைந்தது.*

*வெளிநாட்டு வாழ்க்கை வாழ்ந்து வருகின்ற எங்களுக்கு அம்மாவின் அறிவுரை, வழிகாட்டல் மிகவும் உன்னதமானதாக திகழ்கிறது. இனி எங்கள் உயிருள்ள வரை அம்மா இன்னும் நெருக்கமாக எமது மனங்களில் நிறைந்து இருப்பார்.*

*எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இப்படி ஒரு அம்மா அமைய வேண்டும். இந்த ஜென்மத்தில் நாம் செய்ய புண்ணியமே எமது அம்மா....*

*அம்மாவின் ஆத்மா நிறைவான சாந்தியடைய எமது குல தெய்வங்கள் அருள் புரிய வேண்டும்.*

*என்றும் நம் இதயத்தில் நிலையாக நின்று வழிகாட்டும் அம்மாவை மனதில் வைத்து வழிபடுவேன்.*

***மகள் சறோஜினி சகாதேவன்***

# **மகன் ஜெயக்குமாரின் ஆதங்கம்...**

*எனது ஆருயிர் அம்மாவே!*

*எங்கள் ஐவரையும் ஈன்றெடுத்து, பாராட்டி, சீராட்டி, அன்போடு வளர்த்து, சமூகத்தில் நன்மக்களாக வாழ வேண்டும் என்பதற்காக நீங்களும் அப்பாவும் செய்த தியாகங்கள் அளப்பரியவை. எங்களுக்காகவே உங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்தீர்கள். நீங்கள் எங்களுக்காக செய்த அன்பையும் தியாகங்களையும் எத்தனை வார்த்தைகளால் சொன்னாலும் முழுமையாகச் சொல்லிவிட முடியாது.*

*சில ஆண்டு காலமாக உங்களை பார்க்க மூன்று நேரமும் ஓடோடி வருவேனே! உங்களை கண்ணின் இமை போல் கண்ணும் கருத்துமாக பார்த்தும் காலன் வந்து அழைத்து சென்றதேனோ? பிறப்போடு இறப்பும் இணைந்ததே என்பதை அறிந்திருந்தாலும், உங்கள் பிரிவை ஏற்றுக்கொள்ள மனம் ஏனோ மறுக்கிறது. கண்முன்னே நீங்கள் வாழ்ந்த அந்த நாட்கள் இன்று கனவாகிப் போய்விட்டன. ஆனால், எங்கள் மீது நீங்கள் பொழிந்த அன்பும், அரவணைப்பும், எங்களுக்காக செய்த தியாகங்களும், நீங்கள் எங்களுடன் பகிர்ந்த இனிய நினைவுகளும் எங்கள் மனங்களில் என்றும் அழியாது.*

*காலம் எவ்வளவு கடந்தாலும், நீங்கள் எங்களுடன் இல்லையென்றாலும், உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளங்களில் பசுமரத்தாணியாய் என்றென்றும் நிலைத்திருக்கும். எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் நீங்கள் விட்டுச்சென்ற அன்பின் தடங்கள் என்றும் அழியாதவை.*

*அம்மா, உங்களைப் பார்க்கவும், உங்கள் குரலைக் கேட்கவும் இனி முடியாது என்ற உண்மை என் மனதை வாட்டுகிறது. ஆனாலும், நீங்கள் எங்களுக்கு கற்றுக்கொடுத்த நல்ல பண்புகளுடனும், அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ்வதே உங்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.*

*உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் என்றும் எங்களுடன் இருப்பதாக நம்புகிறேன்.*

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றேன்.***

***என்றும் உங்கள் நினைவுடன் வாழும்***
***அன்பு மகன் ஜெயக்குமார்***

## ***மகன் ராஜ்குமாரின் புலம்பல்...***

*எங்கள் பாசத்திற்குரிய அம்மா,*

*எங்கள் அம்மா எல்லோருடனும் அன்பாக பழகுவார். வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்குச் சுவையான உணவு சமைத்துக் கொடுத்து, அவர்களை நன்றாக உபசரிப்பார்.*

*எனது அம்மா மிகவும் கடவுள் பக்தி கொண்டவர். எல்லா நேரமும் தேவாரம் பாடியும், பக்தி பாடல்களையும் கேட்பார்.*

*என் அம்மா ஒரு நாளைக்கு மூன்று வேளையும் சுவையான உணவு சமைப்பார். எனக்கு மிகவும் பிடித்த புட்டு, தோசை, வடை செய்து தருவார்.*

*எனது அம்மா என்னை காலையும், மாலையும் கை கால் கழுவி இறைவனை துதித்து பாட சொல்லுவார். இதனால் எனது ஞாபகசக்தி அதிகரித்து படிப்பிலும் சிறந்து விளங்கினேன்.*

*அம்மாவின் இழப்பு எமக்கு பேரிழப்பு. என் அம்மாவை என் இதயத்தில் சுமந்து இறக்கும் வரை பூஜித்துகொண்டிருப்பேன்.*

*எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.*

*ஓம் சாந்தி 🙏 ஓம் சாந்தி 🙏 ஓம் சாந்தி 🙏*

***அன்புக்குரிய மகன் ராசன்***

# கடைக்குட்டியின் கதறல்...

*அம்மா... நீங்கள் இல்லாத இந்த உலகம்*
*எவ்வளவு மனிதர்கள் நிறைந்திருந்தாலும்,*
*எனக்கோ வெறுமையாகவே தெரிகிறது.*

*உங்கள் குரல் இன்று கேட்கவில்லை,*
*ஆனால் உங்கள் அன்பு*
*என் இதயத்துடிப்பில் இன்னும் வாழ்கிறது.*

*நான் சிரிக்கும் ஒவ்வொரு நொடியிலும்*
*உங்கள் ஆசீர்வாதம் இருக்கிறது;*
*நான் அழும் ஒவ்வொரு இரவிலும்*
*உங்கள் அரவணைப்பைத் தேடுகிறேன்.*

*உங்களை  மீண்டும் பார்க்க முடியாது என்பதை*
*மனம் ஏற்றுக்கொண்டாலும்,*
*உங்களை  மறக்க முடியாது என்பதை*
*என் உயிர் தினமும் உணர்கிறது.*

***"அம்மா... நீங்கள் இல்லாத இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. நீங்கள் விட்டுச் சென்ற அன்பு மட்டும் என் வாழ்நாள் முழுவதும் என்னுடன் இருக்கும்."***

**அம்மா உங்கள் இழப்பால் துயருறும்**
**கடைக்குட்டி மகன் செல்வன்**

# மருமகனின் புலம்பல்...

*காலத்தினால் செய்த நன்றி*
*சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது*

*“நன்றி மறப்பது நன்றன்று” என்ற நல்வாக்கிற்கு பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த மாமி (தவமணி நற்குணசிங்கம்) அவர்களை இழந்து மிகவும் துயரம் அடைந்தேன். என்றும் புன்சிரிப்புடன் எல்லோருடனும் சிறியோர் முதல் பெரியோர் வரை வயது வேறுபாடுகளின்றி அன்பான பேச்சும், உச்சரிப்பும் மாமியின் தனித்துவ குணமாகும்.*

*ஒவ்வொரு கிழமையும் நாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைக்கு  போது, என்னுடைய முகத்தை பற்றிக் கட்டாயம் சொல்லிவிட்டு, அவருடைய அன்பான சிரிப்பை பார்க்கக்கூடியதாக இருக்கும். எனிமேல் அந்தச் சிரிப்பையும் பார்க்க முடியாது.*

*மாமியுடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றேன் 🙏*

***ஓம் சாந்தி, ஓம் சாந்தி*** 🙏

***நல்ல நினைவு***
***மருமகன் சகாதேவா***

# ***மருமகள்மாரின் புலம்பல்...***

*எங்கள் அன்புள்ள மாமிக்கு,*

*உங்கள் மகன்களின் வாழ்க்கைத் துணையாக இந்தக் குடும்பத்தில் நாம் இணைந்த போது, நீங்கள் எங்களை அன்போடும் பாசத்தோடும் ஏற்றுக்கொண்டீர்கள்.*

*உங்கள் அன்பான வார்த்தைகளும், அக்கறையும், எங்கள் குடும்பத்தின் மீது நீங்கள் கொண்டிருந்த பாசமும் எங்கள் மனதில் என்றும் அழியாத நினைவுகளாக இருக்கும்.*

*உங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் மீது நீங்கள் பொழிந்த அளவற்ற அன்பை நேரில் பார்த்து உணர்ந்தவர்கள் நாங்கள். உங்கள் குடும்பத்தை ஒன்றாக இணைத்து வைத்திருந்த அந்த அன்பும் பாசமும் என்றும் எங்கள் குடும்பத்தில் நிலைத்திருக்கும்.*

*இன்று நீங்கள் எங்களுடன் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள எம்மனம் மறுக்கிறது. ஆனால், நீங்கள் எங்களுடன் கழித்த ஆண்டுகளின் இனிய நினைவுகள் என்றும் எங்களைவிட்டு அகலாது. நீங்கள் எங்களுக்கு கொடுத்த அன்பையும், காட்டிய அக்கறையையும், கற்றுக்கொடுத்த நல்ல பண்புகளையும் எங்கள் வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிப்பதே உங்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.*

*நீங்கள் எங்களுடன் இல்லாவிட்டாலும், உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் என்றும் எங்களுடன் இருக்கும் என்று நம்புகிறோம்.*

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை மனமாரப் பிரார்த்திக்கின்றோம்*** 🙏

***என்றும் உங்கள் நினைவுகளுடன்,***
***உங்கள் மருமகள்மார் ஷகிலா, விஜிதா, சுபோதினி***

# பேரப்பிள்ளைகளின் புலம்பல்கள்

*என் அம்மம்மா ஒரு அம்மம்மாவாக மட்டும் இல்லை எங்களுக்கு அவர் ஒரு தாயைப் போல இருந்தார்.*

*நாங்கள் ஒவ்வொரு முறையும் இலங்கைக்கு வந்த போது, அவர் எங்களை தனது சொந்த பிள்ளைகளைப் போல பார்த்து, அன்புடன் நேசித்தார். அவருடைய அன்பு, கனிவு, மற்றும் நிபந்தனையற்ற பாசம், நாங்கள் எவ்வளவு தூரத்தில் வாழ்ந்தாலும் எங்களை எப்போதும் வீட்டில் இருப்பது போல் உணர வைத்தது.*

*என் வாழ்நாளில் என்றும் நினைவில் வைத்திருக்கும் அழகான நினைவுகளில் ஒன்று எங்களுடைய வாராந்திர தொலைபேசி உரையாடல்கள். நாங்கள் உலகின் இரு முனைகளில் இருந்தாலும், அந்த உரையாடல்கள் எங்களை எப்போதும் நெருக்கமாக வைத்திருந்தன. அந்த பந்தத்தை பகிர்ந்து கொள்ளவும், அந்த இனிய நினைவுகளை உருவாக்கவும் எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது என் வாழ்வின் ஒரு பெரிய பாக்கியம் என்றும் நன்றியுடனும் நினைக்கிறேன்.*

*அம்மம்மா, நீங்கள் எங்களுக்கு கொடுத்த அன்புக்கும், அக்கறைக்கும், அழியாத நினைவுகளுக்கும் நன்றி. உங்கள் அன்பு எங்கள் குடும்பத்தின் மூலம் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும். எங்கள் இதயங்களில் உங்களுக்கு எப்போதும் ஒரு தனி இடம் இருக்கும்.*

***எங்கள் அன்பு அம்மம்மாவுக்கு,***
***அன்புடன் உங்கள் பேத்தி ஷாஜினி***

***என் அன்பு அம்மம்மாவிற்கு,***

*நாங்கள் உங்களை மிகவும் விரும்பினோம், எப்போதும் அன்புடன் நினைப்போம். நீங்கள் மிகவும் அன்பான, அக்கறையான, தன்னலமில்லாத அம்மம்மா. எப்போதும் உங்களை விட மற்றவர்களைப்பற்றி அதிகம் நினைத்து, அவர்களை அன்புடன் கவனித்து பார்த்துக்கொண்டீர்கள்.*

*உங்கள் சிரிப்பும், புன்னகையும் எப்போதும் எல்லோருக்கும் சந்தோஷத்தை கொடுத்தது. உங்கள் சிரிப்பைப் பார்த்தாலே எனக்கும் சிரிப்பு வரும். உங்களுடன் தொலைபேசியில் பேசுவது எனக்கு மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு முறையும் நாங்கள் பேசும்போது, நீங்கள் மிகவும் சந்தோஷமாக இருப்பீர்கள். நானும் உங்களுடன் பேசுவதில் மிகவும் சந்தோஷப்படுவேன்.*

*நாங்கள் இலங்கைக்கு வந்த ஒவ்வொரு முறையும், அம்மாவை சமைக்க நீங்கள் விடமாட்டீர்கள். எங்களுக்காக நீங்களே சமைத்து சாப்பாடு போடுவீர்கள். நீங்கள் செய்த சாப்பாடு எப்போதும் மிகவும் சுவையாக இருக்கும். நீங்கள் செய்த சோறு, சொதி, புட்டு, உருளைக்கிழங்கு கறி எல்லாமே எனக்கு எப்போதும் நினைவில் இருக்கும்.*

*அம்மம்மா, நான் உங்களை எப்போதும் நினைத்து ஏங்குவேன். எங்களுக்கு நீங்கள் கொடுத்த அன்புக்கும், அக்கறைக்கும், கவனிப்புக்கும் நான் எப்போதும் நன்றியுடன் இருப்பேன்.*

*நாங்கள் உங்களுடன் பகிர்ந்த எல்லா அழகான நினைவுகளும் எப்போதும் எங்களுடன் இருக்கும். நீங்கள் எங்கள் இதயங்களில் என்றும் இருப்பீர்கள்.*

*எங்களுக்கு இவ்வளவு அன்பும் அக்கறையும் கொடுத்ததற்கு நன்றி அம்மம்மா* 🙏

***அன்புடன்,***
***உங்கள் பேரன் ஷாஜினன்***

***எங்கள் அன்பு அப்பம்மாவுக்கு,***

*எங்கள் அனைவரையும் அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து, எங்கள் சிறுவயது முதல் எங்களை பார்த்து மகிழ்ந்து, எங்கள் வளர்ச்சியில் சந்தோஷப்பட்ட நீங்கள் இன்று எங்களுடன் இல்லை என்பதை எங்களால் இன்னும் நம்ப முடியவில்லை.*

*நீங்கள் எங்களுடன் இல்லாவிட்டாலும், உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் எப்போதும் எங்களுடன் இருப்பதாக நாங்கள் நம்புகின்றோம்.*

*அப்பம்மா, எங்கள் வாழ்வில் நீங்கள் விட்டுச் சென்ற அன்பான நினைவுகளை எங்கள் இதயங்களில் சுமந்துகொண்டு, நீங்கள் பெருமைப்படும் விதத்தில் நல்ல மனிதர்களாக வாழ முயற்சி செய்வோம்.*

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*** 🙏

***உங்கள் பேரப்பிள்ளைகள்***
***பிரகாஷ், நிருஷா***

***My Appama was like another mum for me.***

*Before I moved to Australia, I would often visit my grandparents in Colombo, where they always made me feel at home. When I was little my Appama stitched me a skirt and blouse, treating me like her own daughter.*

*I am blessed to have such a wonderful Appama and will miss her a lot.*

*Even on the night before her passing, she recognised my name, and I was very happy to hear her talk after so long.*

*May her soul rest in peace with God.*

***From: Vishana***

***Dear Appamma,***

Just 19th July 2026 morning, you held my hand and smiled,
And showered blessings on me.
A birthday gift of grace, so warm and deep,
A gentle memory I will forever keep.

The morning came, a day like all the rest,
I walked to school, still feeling truly blessed,
Unaware that as the time was moving on,
A quiet shadow fell before the dawn.

At 8:10 AM, while I was away at school,
Your gentle soul began its peaceful journey.
You closed your eyes and softly slipped into God's lap,
Leaving behind an endless legacy of love.

Though tears now fall because you are not here,
I feel your final blessing standing near.
Dear Appamma, though we are apart,
Your love lives on forever in my heart.

Your hands may no longer hold mine tight,
But your memory will forever be my light.
And every birthday, I will think of you,
Remembering the love you always knew.

Rest peacefully, dear Appamma, above,
Wrapped forever in God's eternal love.
Though you have left this world and gone away,
Within my heart, you'll forever stay.

Your Loving Granddaughter,
Harini

***Dear Appamma,***

*You are like a second mother for me. You showed me your love and affection for 12 years. Before I went to school on morning you are well and smiled at me a gentle smile, but after I came from school to home you left me alone. I can't forget that day.*

*Ever since I heard that you were gone, my heart has been crying, and I still cannot accept that you have left us. Day and night, my heart aches for you. Can't you hear my cries? You left me alone just one day after my elder sister's birthday. I never imagined I would have to face this pain so soon. I miss you more than words can ever express.*

*The path you showed me is still in my heart and mind. Your kind words, your beautiful smile, and the way you lived your life will remain with me forever.*

*The days have passed and time has moved on, but I still cannot forget you. I remember your face, your kindness, and all the little things that made you so special. I pray to God that you are living in peace.*

*No matter how much time passes, you will always remain in my heart and in my memories. And if I am blessed with another life in this world, I would wish, with all my heart, to be your granddaughter once again.*

***May your soul rest in peace Appamma.***

*"Death can't separate people with love. It can't take away the memories either. In the end, LOVE IS STRONGER THAN DEATH"*

***Your Loving***
***Granddaughter Veni***

***அன்பின் உருவாக எங்களை வளர்த்த அப்பம்மா,***

*உங்கள் மடியில் சாய்ந்து, உங்கள் அன்பில் திளைத்த நாட்கள் இன்று வெறும் நினைவுகளாகிவிட்டன. கதைகள் பல சொல்லி எங்களை மகிழ்வித்தவரே, இன்று மீளாத் துயிலில் நீங்களும் உறங்குவது ஏனோ?*

*உங்கள் புன்னகை பூத்த முகத்தைக் காணாமல் தவிக்கிறோம்; உங்கள் கனிவான குரலைக் கேட்காமல் துடிக்கிறோம். காலங்கள் பல கடந்தாலும், எங்கள் மூச்சுள்ள வரை உங்கள் இனிமையான நினைவுகள் எங்களை விட்டு என்றும் பிரியாது.*

*உடலால் எங்களை விட்டு நீங்கியிருந்தாலும், எங்கள் இதயங்களில் என்றும் வாழ்வீர்கள் அப்பம்மா. உங்கள் அன்பும், அரவணைப்பும், பாசமும் எங்கள் வாழ்நாள் முழுவதும் எங்களுடன் பயணிக்கும்.*

*இறைவன் திருவடியில் உங்கள் ஆன்மா நித்திய சாந்தியடைய மனமாரப் பிரார்த்திக்கிறேன். கண்ணீருடன் உங்களை வழியனுப்புகிறேன். உங்கள் நினைவுகள் என்றும் என் இதயங்களில் நிலைத்திருக்கும்.*

***அப்பம்மா, உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்.***

***ஆத்மா சாந்தியடையட்டும்.***

***உங்கள் அன்பு பேத்தி,***
***கவி***

# கனடாவில் வசிக்கும் தம்பியின் புலம்பல்...

***நீயும் போய்விட்டாய் சின்னக்கா!***

*மாதகல் வீட்டில் நாங்கள் ஆறு பேரும் ஒன்றாய் வளர்ந்த அந்தக் காலங்களை இன்று நினைத்துப் பார்க்கிறேன். மயில்வாகனப் புலவர் சனசமூக நிலையம், கோவில், கிணறு, கால்பந்து விளையாடிய மைதானம், நாடகங்கள் நடந்த மேடை, வீட்டின் முன்னால் நின்ற புளிய மரங்கள் எல்லாமே இன்னும் என் நினைவுகளில் அழியாமல் இருக்கின்றன சின்னக்கா.*

*அண்ணா, அக்கா, சின்னக்கா, சின்னண்ணா, சின்னப்பிள்ளை என்று ஒவ்வொருவராலும் அன்போடு அழைக்கப்பட்ட தங்கச்சியாக, நாம் அனைவரும் ஒன்றாய், ஒற்றுமையாய் வளர்ந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். இன்று எல்லோரும் ஒவ்வொருவராகப் போய்விட்ட இந்த நாளில், அந்த நினைவுகள் கண்களில் கண்ணீரைப் பெருக்குகின்றன.*

*சின்னப்பிள்ளை மறைந்து ஒரு மாதம் முடிவதற்குள்ளாகவே நீயும் போய்விட்டாய் சின்னக்கா. என்னுடைய காலம் முடிவதற்குள் உன்னை ஒருமுறை வந்து பார்த்துவிட வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால், பயணம் செய்ய முடியாதபடி முதுமையும் தள்ளாமையும் என்னைத் தடுத்துவிட்டன.*

*நாம் ஒருவரோடொருவர் தொடர்பில் இல்லாமல் இருந்தபோதிலும், நாங்கள் ஒன்றாக வளர்ந்த அந்த நாட்களை நான் ஒருபோதும் மறந்ததில்லை.*

*கண்டிப்பும், பொறுப்புணர்வும், அன்பும் கலந்தவராய் சிறுவயதில் எங்களுக்கெல்லாம் நற்பண்புகளை ஊட்டி வளர்த்த அண்ணாவின் ஈமச்சடங்கிலும் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. "சின்னண்ணா! சின்னண்ணா!" என்று அழைத்து என்னில் பாசமழை பொழிந்த சின்னப்பிள்ளையின் இறுதிச்சடங்கிலும் அவ்விதமே. நான் "ஐயர்" என்று அன்போடு அழைத்த அக்காவும், நீயும் கூட இன்று இல்லை.*

*கடைசி நாட்களில்கூட ஒன்றாக இருக்க முடியாதபடி காலம் நம்மைப் பிரித்துவிட்டது. எல்லோரும் போய்விட்ட பிறகு,*

*தன்னந்தனியாக நினைவுகளோடு மட்டும் வாழும் இந்த வாழ்க்கை எவ்வளவு கொடியது!*

*ஓடியாடி ஓய்ந்துபோயிருக்கிற இந்த இறுதிக் காலத்தில், ஞாபகங்கள் பெருக்கெடுத்து வருகின்றன. அப்போது வந்து பார்த்திருக்கலாம்... அலைபேசியில் அடிக்கடி கதைத்திருக்கலாம்... என்று காலங்கடந்த பிற்பாடு நினைத்துக் கலங்குகிறேன்.*

*இப்பூமியில் நாம் ஒருவரோடொருவர் உறவாடியிருக்க வேண்டிய காலங்களைத் தவறவிட்டுவிட்டோம். காலம் திரும்பி வராது. ஆனால், நாம் ஒன்றாக வாழ்ந்த அந்த நாட்களின் நினைவுகள் மட்டும் என்றும் அழியாது. மறுபிறவி ஒன்று இருந்தால், மீண்டும் சந்திப்போம், சின்னக்கா.*

***அதுவரை, நம் மாதகல் வீட்டின் நினைவுகளோடு நீ என் மனதில் என்றும் வாழ்ந்துகொண்டிருப்பாய்.***

**உனதன்புத் தம்பி**
**துரைசிங்கம்**

# சிவபுராணம்

*ஓம் நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க*

*வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க*
*புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க*
*கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க*
*சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க*

*ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி*
*தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி*
*மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி*
*சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி*

*ஆராத இன்பம் அருளும் மலை போற்றி*
*சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்*
*அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்*
*சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை*
*முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.*

*கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி*
*எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி*
*விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,*
*எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்*
*பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்*

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்*

*எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்*
*மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்*
*உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற*
*மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்*
*ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே*

*வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா*
*பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி*
*மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே*
*எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே*
*அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே*

*ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்*
*ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்*
*போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்*
*நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே*
*மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே*

*கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்*
*சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று*
*பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்*
*நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த*
*மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை*

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்  சிவ சிதம்பரம்**

# திருவெம்பாவை

1.
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2.
பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

3.
முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்

4.
ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்

கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

5.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

6.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்

7.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

8.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

9.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்

10.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

11.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்

செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

12.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

13.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

14.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

15.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

16.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

17.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

18.

*அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்*
*விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்*
*கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்*
*தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்*
*பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்*
*விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்*
*கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்*
*பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.*

19.

*உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்*
*றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்*
*எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க*
*எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க*
*கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.*

20.

*போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்*
*போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்*
*போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்*
*போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்*
*போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்*
*போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்*
*போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.*

## *சகலகலாவல்லி மாலை*

1.

*வெண்டா மரைக்கன்றி நின்பதந்*
*தாங்கவென் வெள்ளையுள்ளத்*
*தண்டா மரைக்குத் தகாதுகொ*
*லோசக மேழுமளித்*
*துண்டா னுறங்க வொழித்தான்பித்*
*தாகவுண் டாக்கும்வண்ணம்*
*கண்டான் சுவைகொள் கரும்பே!*
*சகல கலாவல்லியே!*

2.

*நாடும் பொருட்சுவை சொற்சுவை*
*தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியிற் பணித்தருள்*
*வாய்பங்க யாசனத்திற்*
*கூடும் பசும்பொற் கொடியே*
*கனதனக் குன்றுமைம்பாற்*
*காடுஞ் சுமக்குங் கரும்பே!*
*சகல கலாவல்லியே!*

3.

*அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு*
*தார்ந்துன் னருட்கடலிற்*
*குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ*
*லோவுளங் கொண்டுதெள்ளித்*
*தெளிக்கும் பனுவற் புலவோர்*
*கவிமழை சிந்தக்கண்டு*
*களிக்குங் கலாப மயிலே!*
*சகல கலாவல்லியே!*

4.

*தூக்கும் பனுவற் துறைதோய்ந்த*
*கல்வியுஞ் சொற்சுவைதோய்*
*வாக்கும் பெருகப் பணித்தருள்*

*வாய்வட நூற்கடலும்*
*தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்*
*தொண்டர்செந் நாவினின்று*
*காக்குங் கருணைக் கடலே!*
*சகல கலாவல்லியே!*

5.
*பஞ்சப் பிதந்தரு செய்யபொற்*
*பாதபங் கேருகமென்*
*நெஞ்சத் தடத்தல ராததென்*
*னேநெடுந் தாட்கமலத்*
*தஞ்சத் துவச முயர்த்தோன்செந்*
*நாவு மகமும்வெள்ளைக்*
*கஞ்சத் தவிசொத் திருந்தாய்!*
*சகல கலாவல்லியே!*

6.
*பண்ணும் பரதமுங் கல்வியுந்*
*தீஞ்சொற் பனுவலும்யான்*
*எண்ணும் பொழுதெளி*
*தெய்தநல் காயெழு தாமறையும்*
*விண்ணும் புவியும் புனலுங்*
*கனலும்வெங் காலுமன்பாடி*
*கண்ணுங் கருத்து நிறைந்தாய்!*
*சகல கலாவல்லியே!*

7.
*பாட்டும் பொருளும் பொருளாற்*
*பொருந்தும் பயனுமென்பாற்*
*கூட்டும் படிநின் கடைக்கணல்*
*காயுளங் கொண்டுதொண்டர்*
*தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா*
*லமுதந் தெளிக்கும்வண்ணம்*
*காட்டும்வெள் ளோதிமப் பேடே!*
*சகல கலாவல்லியே!*

8.

*சொல்விற் பனமு மவதான*
*முங்கவி சொல்லவல்ல*
*நல்வித்தை யுந்தந் தடிமைகொள்*
*வாய்நளி னாசனஞ்சேர்*
*செல்விக் கரிதென் றொருகால*
*முஞ்சிதை யாமைநல்கும்*
*கல்விப் பெருஞ்செல்வப் பேறே!*
*சகல கலாவல்லியே!*

9.

*சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்*
*ஞானத்தின் தோற்றமென்ன*
*நிற்கின்ற நின்னை நினைப்பவர்*
*யார்நிலந் தோய்புழைக்கை*
*நற்குஞ் சரத்தின் பிடியோ*
*டரசன்ன நாணநடை*
*கற்கும் பதாம்புயத் தாயே!*
*சகல கலாவல்லியே!*

10.

*மண்கண்ட வெண்குடைக் கீழாக*
*மேற்பட்ட மன்னருமென்*
*பண்கண் டளவிற் பணியச்செய்*
*வாய்படைப் போன்முதலாம்*
*விண்கண்ட தெய்வம் பல்கோடி*
*யுண்டேனும் விளம்பிலுன்போல்*
*கண்கண்ட தெய்வ முளதோ*
*சகல கலாவல்லியே!*

# *கந்த சஷ்டி கவசம்*

***காப்பு:***

*துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்*
*நிஷ்டையும் கைகூடும், நிமலரருள் கந்தர்*
*சஷ்டி கவசம் தனை.*

*அமர ரிடர்தீர அமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி.*

***நூல்:***

*சஷ்டியை நோக்கச் சரவண பவனார்*
*சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்*
*பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை*
*கீதம் பாடக் கிண்கிணி யாட*

*மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்*
*கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து*
*வரவர வேலா யுதனார் வருக*
*வருக வருக மயிலோன் வருக*

*இந்திரன் முதலா எண்டிசை போற்றி*
*மந்திர வடிவேல் வருக வருக!*
*வாசவன் மருகா வருக வருக*
*நேசக் குறமகள் நினைவோன் வருக*

*ஆறுமுகம் படைத்த ஐயா வருக*
*நீறிடும் வேலவன் நித்தம் வருக*
*சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!*
*சரவண பவனார் சடுதியில் வருக*

*ரஹண பவச ர ர ர ர ர ர ர*
*ரிஹண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி*
*விநபவ சரஹண வீரா நமோநம*
*நிபவ சரஹண நிறநிற நிறென*

*வசர வணப வருக வருக*
*அசுரர் குடிகெடுத்த ஐயா வருக*
*என்னை ஆளும் இளையோன் கையில்*
*பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்*

*பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க*
*விரைந்தெனைக் காக்க வேலோன் வருக*
*ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்*
*உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்*

*கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்*
*நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்*
*சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்*
*குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!*

*ஆறு முகமும் அணிமுடி ஆறும்*
*நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்*
*பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்*
*நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்*

*ஈராறு செவியில் இலகுகுண் டலமும்*
*ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்*
*பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து*
*நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்*

*முப்புரி நூலும் முத்தணி மார்பும்*
*செப்பழ குடைய திருவயி றுந்தியும்*
*துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்*
*நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்*

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோ தனென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க

முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறக் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் நாடினென் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக

அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலாது அருளுவர்
மாற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்

மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!

இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

# வம்சாவளி

*கந்தையா + *மனோன்மணி

- *புண்ணியமூர்த்தி
- *ராமசாமி
- *சிவபாக்கியம்
- ****தவமணி**
- துரைசிங்கம்
- *புவனேஸ்வரி

*அம்பலவாணர் + *செல்லம்மா

- *மனோரஞ்சிதம்
- **நற்குணசிங்கம்**
- பரமேஸ்வரி
- *ஜெயலட்சுமி
- தனலட்சுமி
- நாகராஜா
- மகேந்திரராஜா
- தனபாலசிங்கம்

*தவமணி + நற்குணசிங்கம்

* - அமரர்கள்

- **சரோஜினி** + சகாதேவா
  - மதுஷாஜினி
  - தேவஷாஜினன்
- ***சிவகுமார்**
- **ஜெயக்குமார்** + ஷகிலா
  - பிரகாஷ்
  - நிருஷா
- **ராஜ்குமார்** + விஜிதா
  - ஹரேஷ்
  - விஷானா
- **செல்வகுமார்** + சுபோதினி
  - ஹரிணியா
  - வேணியா
  - கவிநயா

# நன்றி நவிலல்

கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி (20-07-2026) திங்கட்கிழமை இறைபதமடைந்த அன்பு மனைவியும், பாசமிகு தாயாருமான அவர்களின் இறுதிக்கிரியைகள் *23-07-2026* வியாழக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்றன.

அந்நிகழ்வில் நேரில் கலந்துகொண்டு எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, சமூக வலையமைப்புக்களான *Facebook*, *WhatsApp*, *Viber* போன்றவற்றின் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து மரியாதை செலுத்தியவர்களுக்கும், மேலும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும், அன்பு மனைவியினதும், தாயாரினதும் ஆத்மசாந்திக்காக நடைபெற்ற பூசையிலும் கலந்து கொண்டு, இன்றைய எமது துயரத்தில் எங்களுடன் இணைந்து கொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி** 🙏🏽

**இங்ஙனம்,**

**குடும்பத்தினர்**



இந்தப் படம் அம்மாவின் 86 ஆவது பிறந்தநாளான 04-03-2024 அன்று எடுக்கப்பட்டது.

அம்மா உயிருடனிருந்த நாள் வரை, ஒவ்வொரு நாளும் காலை 7.00 மணிக்குள் குளித்து, தலைமுடியைச் சீவி, தாலிக்கொடியை அணிந்து, கையில் காப்பு போட்டுக் கொண்டு, நெற்றியில் விபூதி, குங்குமம் வைத்து, இறைவனை வணங்குவார். அது அவருடைய அன்றாட வாழ்க்கையின் தவறாத ஒழுங்கு. இந்தப் படத்தைப் பார்த்தாலே அது தெளிவாகப் புரியும்.

63 ஆண்டு காலமாக அப்பாவும் அம்மாவும் ஒன்றாக வாழ்ந்த வாழ்க்கை இன்று நினைவாக மட்டுமே உள்ளது. கடந்த மாதம் 20-07-2026 அன்று அம்மா எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார். இன்று அப்பா வீட்டில் தனிமையில் இருக்கிறார். நாங்கள் பிள்ளைகள், மருமகள்மார், பேரப்பிள்ளைகள் அனைவரும் அப்பாவுடன் இருந்தாலும், வாழ்க்கைத் துணையின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதைக் இன்று அப்பாவைப் பார்க்கும் ஒவ்வொரு தருணத்திலும் உணர்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு, பெற்றோர்கள் மெல்ல மெல்ல நம் குழந்தைகளைப் போல ஆகிவிடுகிறார்கள். ஒரே கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்பார்கள். நாம் பலமுறை கேட்ட கதைகளையே மீண்டும் சொல்லுவார்கள். சிறிய விஷயங்களை மறந்துவிடுவார்கள், ஆனால் பழைய நினைவுகளை மட்டும் தெளிவாக நினைவுகூர்வார்கள்.

அவர்களின் நடை தள்ளாடும், வேகம் குறையும், அவர்களின் உலகம் சுருங்கிவிடும். ஒரு காலத்தில் நம்மைத் தாங்கிப் பிடித்தவர்கள், பின்னர் நம்மைச் சார்ந்தே வாழத் தொடங்குகிறார்கள். இந்த மாற்றத்தை உணர்பவர்கள் மிகச் சிலரே. குறிப்பாக, வயதான அப்பா, அம்மா இருவரையும் ஒன்றாக அன்போடு பராமரிப்பவர்கள் இன்று மிகவும் குறைவு. அவர்களை அவசரப்படுத்தாதீர்கள். கடுமையாகக் கண்டிக்காதீர்கள். அவர்கள் ஒரு சுமை என்ற உணர்வை ஒருபோதும் ஏற்படுத்தாதீர்கள்.

ஏனெனில், ஒரு நாள் அவர்களின் குரல் அடங்கிவிடும். அவர்கள் கேட்கும் கேள்விகள் நின்றுவிடும். அவர்கள் சொல்லும் கதைகள் மீண்டும் ஒருபோதும் கேட்க முடியாத நினைவுகளாகிவிடும். அப்போது, "இன்னும் ஒருமுறை அந்தக் கதையைச் சொல்ல மாட்டார்களா?" என்று ஏங்குவோம். இன்னும் ஒருமுறை என் பெயரை அழைக்கமாட்டார்களா?"என்று மனம் தவிக்கும். அந்த ஒரு வாய்ப்புக்காக எதையும் கொடுக்கத் தயாராக இருப்போம்.

வயது முதிர்வு என்பது எல்லோருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம். ஒருகாலத்தில் அவர்கள் நம்மை எப்படி அன்போடும் பொறுமையோடும் கவனித்துக்கொண்டார்களோ, அதே அன்போடும் பொறுமையோடும் அவர்களைக் கவனித்துக்கொள்வது நமது கடமை மட்டுமல்ல அது அவர்களுக்குச் செலுத்தும் இறுதி நன்றிக்கடனும் ஆகும்.

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நொடியிலேயே என் கண்களில் கண்ணீர் வழிகிறது. என் பிள்ளைகள் அடிக்கடி என்னிடம், "அப்பா, நீங்கள் ஏன் ஒருநாளும் அழுவதில்லை?" என்று கேட்பார்கள். அவர்களுக்கு அந்தக் கேள்விக்கான பதில், அம்மா எங்களை விட்டுப் பிரிந்த பிறகுதான் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அம்மா... உங்கள் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது 🙏

**கடைக்குட்டி மகன் செல்வகுமாரின் முகநூல் பதிவிலிருந்து...**

# தலைமாட்டில் குத்து விளக்குகள்

அந்தக்குத்து விளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன.

அவை எரிந்தாலென்ன, அணைந்தாலென்ன அந்தப்படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்துவிட்டது.

அது எரிந்து கொண்டிருந்தவரை குத்துவிளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண்ணெயை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான்.

அழுவாரையும், சிரிப்பாரையும் அறிய முடியாத சடலத்திற்கு, அந்த விளக்குகள் எந்த வகையில் உதவப்போகின்றன?

அந்த விளக்கை ஏற்றுவதும், அணைப்பதும் உங்கள் கைகளே!

உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவனுடைய கைகள்?

மெய்ஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் இங்கேதான் யோசிக்கிறார்கள்.

எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே, அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு வழிகாட்டின என்பதே முக்கியம்.

அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்து விளக்குகள் எரிகின்றன.

பிறந்த விளக்கு அணைந்துகிடப்பதைச் செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக்கொண்டிருக்கின்றன.

மானுடத்தின் சாகசம் மரணப்படுக்கையோடு நின்றுவிட்டது 🙏🏼

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றோருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"



– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –